செ.வெ.எண்-20 நாள்-12.01.2021

# அரியலூர் மாவட்டம்
# பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் தொடர்பாக ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சுகாதாரத்துறையின் சார்பில் பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் தொடர்பாக ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (12.01.2021) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

அரியலூர் மாவட்டத்தில் பெண் குழந்தை விகிதத்தை அதிகரிக்கும் வகையிலும், கிராம அளவில் மக்கள் மனதில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் என்ற பெண் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து சுகாதாரம், கல்வித்துறை, சமூக நலத்துறை, மகளிர் திட்டம் ஆகிய துறைகளின் சார்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், மகப்பேறு மருத்துவர்கள் கருவில் இருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்பது தெரிவிப்பது சட்டப்படி குற்றமாகும். ஸ்கேன் மையங்களை முறையாக நடத்தியும், பதிவேடுகள் முறையாக பராமரித்து, புதுப்பிக்க வேண்டும். கருவில் வளரும் குழந்தை பாலினம் பரிசோதனைகள் மேற்கொள்ளும் ஸ்கேன் மையங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளபடும். கருவில் வளரும் சிசுவின்பாலினத்தை எக்காரணம் கொண்டும் கண்டறியவோ, கருக்கொலை செய்யவோ முயலும் பட்சத்தில் அவர்களின்மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், ஸ்கேன் மையங்களை இணைய வழியாக ஒன்று சேர்க்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, இரண்டு பெண் குழந்தைகளை பெற்ற 123 தாய்மார்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கி துவக்கி வைத்தார்கள் .

இக்கூட்டத்தில், இணை இயக்குநர்கள் (சுகாதாரப்பணிகள்) திருமால், இளவரசன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) வீ.சி.ஹேமசந்த்காந்தி, மற்றும் மகப்பேறு மருத்துவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**